

தனி பிரதி
ரூ.10/-

**PORIYIYAL KADHIR**



# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 7 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூன் 2015

## நெஞ்சம் நிறைந்து வாழ்த்தி வரவேற்கிறோம்



ஐந்தாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று, நல்லாட்சிதரவிருக்கும் தங்கதாரகை, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வோடு வரவேற்கிறோம்.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

புதிதாக கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் பொறியாளர் ஆர்.பழனிச்சாமி இல்ல முதல் தளம் திறப்பு விழா நிகழ்ச்சிகள்





பொதுச் செயலாளர் மடல்

மடல் - 7 (2014 - 2015)



## தொடரும்

## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சாதகமான 13 கோப்புகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. வேண்டுமென்றே தானாக நடக்க வேண்டிய கோப்புகளை கூட தலைமைப் பொறியாளர் (பொது) திருவாளர் S. திருமாறன் அவர்கள் உள்நோக்கத்துடன் தாமதப்படுத்தியும் பட்டயப்பொறியாளர்களுக்கு எதிராகவும் செயல்படுகிறார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு வரை பொறியாளர் சங்கத்தின் திருச்சி கிளை தலைவராக இருந்தவர் தான் திருவாளர் S. திருமாறன். எனவே பொறியாளர் சங்கத்தின் ஏஜெண்டாக செயல்பட்டுவருகிறார். தலைமைப்பொறியாளர் (பொது) ஆக பதவி ஏற்ற முதல் நாளே தன் ஏஜெண்ட் வேலையை ஆரம்பித்துவிட்டார். இதே பொறியாளர் சங்கத்திற்கு ஆதரவாக என்றால் ஜெட் வேகத்தில், சட்டத்திற்கு எதிராக கூட செயல்படுகிறார். உதாரணம் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வில் 26 உதவிசெயற்பொறியாளர்களை கட்டாய விடுப்பில் அனுப்பிவிட்டு வேறு 26 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளித்தது. இது ஒரு ஹைடெக் முறைகேடு. 26 காலி பணியிடங்களில் 52 பேர்களுக்கு பணி அமர்வு கொடுத்த ஹைடெக் முறைகேட்டை திருவாளர் S. திருமாறனால் மட்டுமே செய்ய முடியும். அந்த 26 நபர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு அளிக்க வேண்டிய அவசியம் எதுவுமே இல்லை. அந்த 26 பேரில் யாருமே பணி ஓய்வு பெற போவதில்லை. அப்படியே ஒருவேளை பணி ஓய்வு பெறுவதாக இருந்தால் கூட இந்த ஹைடெக் முறைகேட்டை செய்வது தவறு.

அரசாங்கத்திடமிருந்து ஏதாவது விவரங்கள் கேட்டு கோப்புகள் வந்தால் அதற்கு பதிலே அளிக்காத மிக மோசமான ஒரு நிர்வாகத்தை திரு.S. திருமாறனால் மட்டுமே தர முடியும்.

ஏற்கனவே தலைமைப்பொறியாளர் (பொது) அலுவலகத்தில் பல கோப்புகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதை முதன்மை செயலாளர் பொதுப்பணித்துறை அவர்களுக்கு நாம் புகார் தெரிவித்திருந்தோம். அதனடிப்படையில் நிலுவையில் உள்ள கோப்புகளை உடனடியாக முடிக்க அறிவுறுத்தி தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களுக்கு அரசிடமிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அப்போதும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

தலைமைப்பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் கோப்புகளை முடித்து தரவேண்டும் என்று தலைமை பொறியாளர் (பொது) இணைத்தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோரிடம் பலமுறை வலியுறுத்தியும் ஒருகோப்பு கூட நகரவில்லை. வழக்கம் போல் இணைத்தலைமைப்பொறியாளர் (பொது) திரு. D. கலீல் அகமது சந்தித்த போது தன் வழக்கமான மழுப்பல் பதிலை சொன்னார். இது சரியில்லை என்று சுட்டிக்காட்டி பேசினேன். அரசாங்கத்திடமிருந்து விவரங்கள் கேட்டு தலைமை பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு வரும் கோப்புகளுக்கு கூட பதில் எழுதாத வருடக்கணக்கில் நீண்ட தாமதம் ஏற்படுத்தும் மிக மோசமான நிர்வாகம் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தின் நிர்வாகம் என்று கூறினேன். நீங்களும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களும் திட்டமிட்டு பட்டயப்பொறியாளர்களை பழி வாங்குகிறீர்கள். நீதிபதி போல நடுநிலைமையாக செயல்படவேண்டிய இந்த இருக்கையில் அமர்ந்துக்கொண்டு அராஜகம் செய்கிறீர்கள் ஒரு தலைபட்சமாக செயல்படுகிறீர்கள் இது சரி அல்ல என்று கூறினேன். சம்பளம் கொடுப்பதை போல பொறியாளர்களின் பணிவரன்முறை என்பது தானாக நடக்கவேண்டிய செயல். அதைக்கூட திட்டமிட்டு தடுப்பது முறையல்ல. எனவே எங்கள் கோப்புகள் மீது உடனடி நடவடிக்கை தேவை என்று கூறினேன். அதற்கு "செய்துக்கொண்டிருக்கிறோம். நடக்கும் போது நடக்கும்" என்று இணைத்தலைமைப்பொறியாளர் திருவாளர் D. கலீல் அகமது பதில் அளித்தார். இது எவ்வளவு அலட்சியமான, ஆணவமான பதில்?

உடனே நான் "இது சரியல்ல" என்று கூறினேன். தானாக நடக்கவேண்டிய காரியங்களுக்கு கூட நாங்கள் போராட்டம் நடத்த வேண்டுமா? என்று கேட்டதற்கு "வேண்டுமானால் போராட்டம் நடத்துங்கள்" என்று அடாவடியாக திரு. D. கலீல் அகமது பதில் அளித்தார். உடனே நான் "நாங்கள் போராட்டம் நடத்தினால் அது அரசாங்கத்திற்கு எதிரானதாக ஆகாதா? நீங்களும் தலைமைப்பொறியாளரும் செய்யும் அராஜகத்திற்கு நாங்கள் அரசாங்கத்தை எதிர்த்து போராட வேண்டுமா? இது அடாவடி அல்லவா? ஏற்கனவே எங்களுக்கு, எதிராக அராஜக ஆட்டம் போட்ட இணைத்தலைமைபொறியாளர் (பொது) திரு. ஜெயச்சந்திரனை அந்த பதவியிலிருந்து தூக்கி எறிந்திருக்கிறோம் என்று எச்சரிக்கை விடுத்துவிட்டு "உடனடியாக எங்கள் அனைத்து கோப்புகளையும் முடிக்காவிட்டால் விளைவுகள் மிக மோசமாக இருக்கும்" என்று கூறிவிட்டு வெளியே வந்து விட்டேன்.

இப்படி கடுமையாக எச்சரிக்கை விடுத்தபிறகு அவசர அவசரமாக சில கோப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊட்டுப்பதவியில் இருந்து இளநிலைப்பொறியாளர் (சிவில்), இளநிலைப்பொறியாளர் (மின்னியல்) பதவி பெற்றவர்கள், மற்றும் உதவிப்பொறியாளர்கள்ஆகியோர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பட்டியல் அடுத்த மாத பொறியியல் கதிரில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமால் வழக்கில் கூறப்பட்டுள்ள கருத்தை எப்படியாவது மின்னியல் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வில் அமுல்படுத்திவிட வேண்டும் என்று பொறியாளர் சங்கத்தின் ஏஜெண்ட் திருவாளர் S. திருமாறன் துடித்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய அனைத்து முயற்சிகளையும் முறியடிக்க திருவாளர் S. திருமாறன், பொறியாளர் சங்கம், புதிதாக முளைத்துள்ள PWD மின்பொறியாளர்கள் சங்கம் ஆகியவை ஒன்றாக இணைந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. இவ்வளவு நாட்கள் பொறியாளர் சங்கம் மட்டும் தான் நமக்கு எதிராக செயல்பட்டு வந்தது. தற்போது புதிதாக PWD மின்பொறியாளர்கள் சங்கமும் நமக்கு எதிராக கிளம்பியுள்ளது. எதிரிகளோடு தற்போது துரோகிகளும் கிளம்பி இருக்கிறார்கள். எதிரிகளை சமாளிப்பது எளிது. ஆனால் துரோகிகளை சமாளிப்பது கடினம். எல்லாவற்றையும் மனதின் ஆழத்தில் புதைத்து , மறைத்து வெளியே சிரித்துக் கொண்டு, சகித்துக் கொண்டு தான் செல்ல வேண்டியிருக்கிறது.

2009-2010 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. பட்டயப்பொறியாளர்களுக்கு எதிரான கொள்கையுடைய, பொறியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவராக இருந்த திரு. ச. ஜெயராமன் அவர்கள் தலைமைப்பொறியாளர் (பொது) பதவிக்கு வந்து, பொதுவாக இருக்க வேண்டிய திரு. ஜெயராமன் பட்டயப்பொறியாளர்களுக்கு எதிராக வெறித்தனமாக செயல்பட்டார். அப்போது இணைத்தலைமைப்பொறியாளர் (பொது) ஆக இருந்த திரு. ஜெயச்சந்திரனும் நமக்கு எதிராக செயல்பட்டார். போராட்டங்களை நடத்தினோம். இணைத்தலைமைப்பொறியாளர் (பொது) பதவியில் இருந்த திரு. ஜெயச்சந்திரன் அந்தப் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். அப்போது இருந்த அசாதாரண அரசியல் சூழ்நிலையில் திரு. ஜெயராமன் தப்பிவிட்டார். ஆனால் தற்போது சூழ்நிலை அப்படியல்ல எனவே திரு. திருமாறனையும், திரு. D. கலீல் அகமதுவையும் அந்த பதவியில் இருந்து தூக்கி எறிவது அவ்வளவு கஷ்டம் இல்லை. இந்த இருவரின் அராஜக போக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றால் கண்டிப்பாக இந்த இருவரும் தூக்கி எறியப்படுவார்கள். அராஜக ஆட்டம் போடும் திருவாளர் திருமாறனும், திருவாளர் D. கலீல் அகமதும் தங்களின் தப்பான ஆட்டத்தை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கிறேன். ஆடிக்காற்றில் அம்மிக்கல்லே பறந்துக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க திருவாளர் திருமாறனும் திருவாளர் D. கலீல் அகமதும் எம்மாத்திரம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

தானாக நடக்க வேண்டிய காரியங்களுக்கு கூட இப்படி போராட வேண்டிய அவலநிலை பொதுப்பணித்துறையில் பட்டயப்பொறியாளர்களுக்கு இருந்து வருகிறது.

இதற்கு காரணம் நீதிபதி போல் நேர்மையாக நடுநிலையாக செயல்பட வேண்டிய தலைமைப்பொறியாளர் (பொது) பதவிக்கு நேர்மையானவர்கள் வருவதில்லை.

இதுதான் கோளாறு. இந்த நிலைமை ஒரு நாள் மாறும் அல்லது மாற்றுவோம்.

பொதுப்பணித்துறையில் நேர்மையான, நடுநிலையான நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு I.A.S. அதிகாரி நியமிக்கப்படவேண்டும்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்


D. முருகேசன், பொதுச் செயலாளர் செல்பேசி எண் 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com


## பணி ஓய்வு பெற்றவர்கள்

செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20601/2015/, நாள்28.05.2015ன் படி 31.05.2015 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | திரு. C. சண்முகசுந்தரம் (05.05.1957) | ஆட்சி அலுவலர் |
| 2. | திரு. M. பாஸ்கரன் (07.05.1957) | இளம் பொறியாளர் |
| 3. | திரு. K. குமாரவேல் (24.05.1957) | வானொலி மேற்பார்வையாளர் |

சு. திருமாறன்
முதன்மை தலைமைப் பொறியாளர் நீஆது
(ம) தலைமைப் பொறியாளர், (பொது)

**அரசாங்கத்தை எதிர்த்து போராட்டம் நடத்த சொல்லும் இணைத்தலைமை பொறியாளர் (பொது) திருவாளர் D. கலீல் அகமது அவர்களின் அடாவடித்தனத்தை வன்மையாக கண்டிக்கிறோம். இதன் பின்னணியில் உள்ள தலைமைப் பொறியாளர் (பொது) திருவாளர் S. திருமாறன் அவர்களின் அராஜக போக்கை வன்மையாக கண்டிக்கிறோம்.**

-தமிழ்நாடு பொறியியல் சங்கம்

# கோயம்புத்தூர் பொறியாளர் ஆர். பழனிச்சாமி இல்லம் முதல் தளம் திறப்பு விழா

கோயம்புத்தூர் பொறியாளர் ஆர். பழனிச்சாமி இல்லம் முதல் தளம் அழகுற கட்டப்பட்டுள்ளது. இந்த முதல் தள கட்டிடத்தின் திறப்பு விழா 09.05.2015 அன்று நடைபெற்றது.

முதல் நிகழ்வாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநிலத்தலைவரும் ஓய்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளரும் ஆன மரியாதைக்குரிய பொறியாளா ஆர். பழனிச்சாமி அவர்கள் ரிப்பன் வெட்டி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

அதற்குபிறகு மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகியது. மாநிலத்தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையிலும் பொதுச்செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே ஆரம்பமானது.

கோவை பொள்ளாச்சி கிளையின் செயலாளர் பொறியாளர் எஸ். இராஜன் பிரேம்குமார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநிலத்தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். பொதுச்செயலாளர் பொறியாளர் த. முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் இந்த கட்டிடம் சிறப்புற அமைய ஒத்துழைத்த அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக முதலில் நன்றியை தெரிவித்துக் கொண்டார். தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான அனைத்துக் கட்டிடங்களை விட இந்த கட்டிடம் சிறப்பாக உள்ளதாக பாராட்டினார். இந்த கட்டிடத்தை திறந்து வைக்க தகுதியுள்ள சிறப்பான மனிதர் முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் ஆர்.பழனிச்சாமி அவர்கள் மட்டுமே என்றும், எளிமையோடு வாழும் மிக உயர்ந்த மனிதர். கள்ளம் கபடமற்ற நல்லமனிதர், கோயம்புத்தூரில் நமது சங்கத்திற்கென்று ஒரு கட்டிடம் அமைய முழுமுதற் காரணமானவர் என்று கூறினார்.

அடுத்ததாக கட்டிடத்தை திறந்து வைத்த முன்னாள் மாநிலத்தலைவர் பொறியாளர் ஆர். பழனிச்சாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தான் எப்படி இந்தளவுக்கு ஒரு உயர்ந்த நிலைமைக்கு வர முடிந்ததையும், கோயம்புத்தூர் கட்டிடம் உருவான விதத்தையும் மிக விரிவாக எடுத்துரைத்தார்.

அடுத்ததாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் மூத்தப் பொறியாளர் A.M. பாபு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கோயம்புத்தூர் இல்லக்கட்டிடம் உருவான விதத்தை பற்றி தெளிவாக விளக்கினார். இந்த கட்டிடம் உருவாக காரணமானவர்களில் இவரும் முக்கியமானவர்.

அடுத்து அகில இந்திய டிப்ளமோ பொறியாளர் மாமன்றத்தின் தென்மண்டல செயலாளர் பொறியாளர் V.V. சிதம்பரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மத்திய அரசின் ஏழாவது சம்பள கமிஷனில் பட்டயப் பொறியாளர்களுக்கு உரிய நியாயம் கிடைக்க அகில இந்திய டிப்ளமோ பொறியாளர் மாமன்றம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மூத்தப் பொறியாளர்கள் R. வெங்கடசுப்பு, சி.ப. சண்முகம், R. ஞான பண்டிதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மூத்தப்பொறியாளர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது.

மேற்கு மண்டல செயலாளர் பொறியாளர் C. பன்னீர்செல்வம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# 09.05.2015 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 09.05.2015 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் கோயம்புத்தூரில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். கோவை பொள்ளாச்சி கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் S. பொன்னுசாமி அவர்களும், மையச் சங்கம் சார்பாக மேற்கு மண்டல செயலாளர் பொறியாளர் C. பன்னீர்செல்வம் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் C. கணபதி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் கோவை பொள்ளாச்சி கிளையின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

சென்ற மையச்செயற்குழுகூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 21 நபர்களின் வழக்கின் தற்போதைய நிலை அரசாணை எண்1 க்கு விதித்திருத்தம் வழங்குவதை தடுக்க மாற்றுச்சங்கம் எடுத்து வரும் நடவடிக்கை, திருமால் வழக்கில் நமக்கு எதிராக கூறப்பட்டுள்ள கருத்தை மின்னியல் உதவ ிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் அமுல்படுத்த தலைமைபொறியாளர் (பொது) திரு.S. திருமாறன், பொறியாளர் சங்கம் மற்றும் பொதுப்பணித்துறை மின் பொறியாளர்கள் சங்கம் ஆகியவை கைகோர்த்து வெறித்தனமாக செயல்படுவது, அதை முறியடிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வர் உள்ளிட்டவர்களை சந்தித்து எடுத்த நடவடிக்கைகள், பொறியாளர் சங்கம் தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணி தொகுதி (TNESS) விதிகளில் தவறுதலாக இடம்பெற்றுள்ள விதியை சுட்டிக்காட்டி, அதற்கு பிறகு 1956ம் ஆண்டு மேற்கண்ட விதியை மாற்ற புதிய விதி வகுக்கப்பட்டதை மறைத்து, இனி 25 சதவிகித பணியிடங்களில் கூட பட்டயப் பொறியாளர்களை இளநிலைப்பொறியாளர்களாக நியமிக்கக்கூடாது என்று பொறியாளர் சங்கம் கொடுத்துள்ள கடிதம், இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய

முரண்பாடு, சிவில் மற்றும் மின்னியல் இளநிலைப்பொறியாளர்களின் பணிவரன்முறை, உதவிப்பொறியாளர்களின் பணிவரன்முறை உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு, பட்டயம் படித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர் பதவி உயர்வு, அரசாணை எண் 66 சம்பந்தமான வழக்கு, பகுதி நேரப் பட்டப்படிப்பு முடித்த இளநிலைப்பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவிப் பெயர் மாற்றம், துறையில் புதிதாக 500 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உருவாக்குதல் சம்பந்தமான கோப்பு, பணியிடைக்காலம் பிழைபொறுத்தல் கோப்பு தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு, பல்வேறு வழக்குகள், பல்வேறு விதித்திருத்த கோப்புகள் ஆகியவை குறித்து விரிவாக பேசினார்.

இறுதியாக 2009-10ம் ஆண்டில் தலைமை பொறியாளர் (பொது) ஆக இருந்து தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிராக செயல்பட்ட திரு. ச. ஜெயராமன் அவர்களை விட ஆயிரம் மடங்கு அதிகமாக தற்போது தலைமை பொறியாளர் (பொது) ஆக இருக்கக்கூடிய திரு.S. திருமாறன் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிராக வெளிப்படையாக வெறித்தனமாக செயல்படுகிறார். பொறியாளர் சங்கத்தின் ஏஜெண்ட் போல வெளிப்படையாக செயல்படுகிறார். பரமசிவன் கழுத்தில் பாம்பு என்பது போல மிக அதிகமாக ஆட்டம் போடுகிறார். இந்த ஆட்டத்திற்கு முடிவு கட்டியே ஆகவேண்டும். நடுநிலைமையாக செயல்பட வேண்டிய திருவாளர்.S. திருமாறன் ஒரு சார்பாக வெளிப்படையாக செயல்படுகிறார். இலங்கை தமிழர்களுக்கு ஒரு ராஜபக்ஷே, பொதுப்பணித்துறை பட்டயப் பொறியாளர்களுக்கு ஒரு திருமாறன் என்பது போல் செயல்படுகிறார். தானாக நடக்கவேண்டிய கோப்புகளில் கூட கையெழுத்திடாமல் வேண்டுமென்றே இழுத்தடிக்கிறார். இவர் வந்த பிறகு இவர் அலுவலகத்தில் 13 கோப்புகள் நிலுவையில் உள்ளது. இதே பொறியாளர் சங்கத்திற்கென்றாலும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிரானது என்றாலும் ஜெட் வேகத்தில் பல ஹைடெக் முறைகேடுகளை அரங்கேற்றுகிறார் என்று கூறினார். இதுவரை பொறியாளர் சங்கம் மட்டும் தான் நமக்கெதிராக செயல்பட்டு வந்தது. தற்போது புதிதாக முளைத்துள்ள பொதுப்பணித்துறை மின்பொறியாளர் சங்கம், பொறியாளர் சங்கத்துடன் கைகோர்த்து, ஒருங்கிணைந்து தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிராக செயல்படுகிறது என்று கூறினார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் G.விஜயசேகர் இணைசெயலாளர் கோவை பொள்ளாச்சிக்கிளை V. இராமகிருஷ்ணன் பொருளாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை K. ஆதிமூலம் செயலாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை S. ராஜன்பிரேம்குமார் செயலாளர் கோவை பொள்ளாச்சிக்கிளை G. அண்ணாமலை செயலாளர் புதுக்கோட்டை கிளை S.R. சுப்ரமணியம் செயலாளர் தர்மபுரி கிளை S.R. ரவிச்சந்திரன் பொருளாளர் ஈரோடு கிளை A.G.A. பாபுராஜ் செயலாளர் திருவாரூர் நாகை கிளை S. பொன்னுசாமி தலைவர் கோவை பொள்ளாச்சி கிளை G. பெள்ளிராஜ் இணைச் செயலாளர் கோவை பொள்ளாச்சி கிளை, மூத்தப் பொறியாளர் T.P. பாலசுப்ரமணியம் ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

விதித்திருத்த பிரிதிநிதி பொறியாளர் N. கணேசபிரகாஷ் விதித்திருத்தம் குறித்து உரையாற்றினார். நிதிச்செயலாளர் பொறியாளர் நடராஜன் அவர்களால் 01.11.2014 முதல் 30.04.2015 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N. புண்ணியகோட்டி அவர்கள் 01.11.2014 முதல் 30.04.2015 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

வெளியீட்டுச்செயலாளர் பொறியாளர்

K. கமால்தீன் அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்குவடி, குறித்து உரையாற்றினார். அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் R. தயாளகுமார் கிழக்கு மண்டல செயலாளர் D. சந்திரன் வடக்கு மண்டல செயலாளர் P. சசிகுமார் தெற்கு மண்டல செயலாளர் C. பன்னீர் செல்வம் மேற்கு மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்ல காப்பாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

அடுத்த பொதுக்குழுக்கூட்டம் தெற்கு மண்டலத்தின் சார்பாக நடத்துவது எனவும் இடம் தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் S. ராஜன்பிரேம்குமார் அவர்களும் மையச் சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பொதுப்பணித்துறையில் நடுநிலைமையான, நேர்மையான நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு I.A.S அதிகாரியை நியமிக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

2. தானாக நடக்கவேண்டிய காரியங்களை கூட நடக்கவிடாமல் தடுக்கும், நடுநிலைமைதவறி பாரபட்சமாக செயல்படும் தலைமை பொறியாளர்(பொது) திரு.S. திருமாறன் அவர்களுக்கு இந்த மையச்செயற்குழு கூட்டம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

3. இலங்கை தமிழர்களுக்கு ஒரு ராஜபக்ஷே, பொதுப்பணித்துறை பட்டயப் பொறியாளர்களுக்கு ஒரு திருமாறன் என்பது போல் நடுநிலைமை தவறி ஒரு தலை பட்சமாக அராஜக போக்கை கடைபிடிக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) திரு.S. திருமாறன் அவர்களை பணியிட மாற்றம் செய்யவேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துவது எனமையச் செயற்குழு தீர்மானிக்கிறது. தேவைப்பட்டால் போராட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

4. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு அரசிடமிருந்து கூடுதல் விவரங்கள் கேட்டு தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு வந்து வருடக்கணக்கில் பதில் அளிக்காமல் இருக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை இம்மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

5. அரசிடமிருந்து கூடுதல் விவரங்கள் கேட்டு தலைமைப்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள 5 கோப்புகளை நீண்டகாலமாக அனுப்பாமல் வைத்திருக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை இம்மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

6. நான்கு ஆண்டுகள் பணி முடித்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலை பொறியாளர் பதவி உயர்வு அளிக்க, வேண்டுமென்றே மறுக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை இம் மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

7. பகுதி நேர பட்டப்படிப்பு முடித்த இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப்பொறியாளர் பதவிபொயர் மாற்றம் செய்ய அராஜகமாக மறுக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை இம்மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

## திருவாளர் திருமாறனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றா?

1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வரைவாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பொறியாளர் புண்ணியமூர்த்தி அவர்களை தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து 25.05.2015 அன்று அவமானப்படுத்தியிருக்கிறார்கள்.

தலைமைப்பொறியாளர்(பொது) திருவாளர் திருமாறன் இணைத்தலைமைப்பொறியாளர் (பொது) திருவாளர் அப்துல் கலீல் ஆகியோரின் அடாவடித்தனத்தை தமிழ்நாடு பொறியியல் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. பொதுப்பணித்துறையில் 155 ஆண்டுகால வரலாற்றில் எந்த தலைமைப்பொறியாளரும் இவ்வளவு மோசமாக நடந்துக்கொண்டதில்லை. திருவாளர் திருமாறனின் ஆட்டத்திற்கு அளவில்லாமல் போய்விட்டது.

வரைவாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பொறியாளர் புண்ணியமூர்த்தி அவர்கள் TNEA பொதுச்செயலாளர் பொறியாளர் த. முருகேசன் அவர்களுக்கு அனுப்பிய குறுஞ்செய்தி, (SMS)

Sir,

I have not permitted entry to the CE (Gl)'s Office today. What else can I do as General Secretary of Draughtsmen Association. When asked JCE (Gl), informed that no one can enter into CE (Gl) Office hereafter. Can meet only CE (Gl) or JCE (Gl) for any information. I am ashamed sir. Is it correct to treat Association key office bearers like this? please advise me sir.

Punniyamoorthi.

### இரங்கல் செய்தி

மதுரைக்கிளை இணைச்செயலாளர் பொறியாளர் K. போஸ், பணி ஆய்வாளர் அவர்களின் முதல் மகன் K.B. முத்துமணி (E.E.E) 17.04.2015 வெள்ளியன்று விபத்தில் அகால மரணமடைந்தார்.

கோவை - பொள்ளாச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் K. மோகன்ராஜ் பணி ஆய்வாளர், அவர்களின் தந்தை செ. கருப்புச்செட்டி அவர்கள் 20.01.2015 அன்று இயற்கை எய்தினார்.

கோவை - பொள்ளாச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் K. சதீஸ்பாபு பணி ஆய்வாளர், அவர்களின் தந்தை V. கண்ணையன், அவர்கள் 03.04.2015 அன்று இயற்கை எய்தினார்.

கோவை - பொள்ளாச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் M.H. மனோகரன் பணிஆய்வாளர், அவர்களின் தந்தை ஆலன் அவர்கள் 02.05.2015 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# செயலுக்கு தகுந்த விளைவு

**உதவிப் பொறியாளரிடம் ரூ. 2 இலட்சம் லஞ்சம் கேட்ட ஜெயபால் மோகன். சன்நியூஸ் தொலைக்காட்சி, பத்திரிக்கைகள், WhatsApp மூலம் அம்பலம்.**

தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு ஜெயபால்மோகன் செய்த கெடுதல்கள் ஏராளம். 19 ஆண்டுகளாக சந்தா கொடுக்காமல், சங்கத்தின் பக்கமே வராமல் இருந்த ஜெயபால்மோகன் தன்மீது உள்ள ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள சங்கத்திற்கு வந்தார்.

பல்வேறு முறையற்ற செயல்களில் ஈடுபட்டார். அவற்றில் ஒன்று சங்கப்பணத்தை முறைகேடு செய்து கையும், களவுமாக மாட்டிக் கொண்டது. சங்கப்பொறுப்பில் இருந்து தூக்கி எறியப்பட்டார்.

அதனால் ஆத்திரமடைந்த ஜெயபால்மோகன் சங்கத்திற்கு எதிராக பல்வேறு அராஜக செயல்களில் ஈடுபட்டார். சங்கத்திற்கு எதிராக பல்வேறு வழக்குகள் தொடுத்தார். ஒரு வழக்கில் கூட வெற்றி பெறவில்லை. பொதுக்குழுக் கூட்டங்கள் நடத்தக்கூடாது என்று நீதிமன்ற தடையாணை கேட்டு வழக்கு, சங்க தேர்தல்கள் நடத்தக்கூடாது என்று வழக்குகள், சங்க தேர்தல்கள் செல்லாது என்று வழக்கு, சேப்பாக்கம் சங்க அலுவலக கட்டிடம் புதுப்பிக்கும் பணி நடைபெற்றபோது அந்த வேலை நடக்க விடாமல் பல்வேறு இடைஞ்சல்கள், வேலூரில் நூற்றாண்டு துவக்கவிழா நடக்கவிடாமல் தடுக்க நீதிமன்ற தடையாணை பெற முயற்சி, சென்னையில் நந்தம்பாக்கத்தில் மேதகு முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்கள் கலந்துக் கொண்ட நூற்றாண்டு நிறைவு விழாவை நடக்க விடாமல் தடுக்க நீதிமன்ற தடையாணை பெற முயற்சி, பெயர் கேள்விப்படாத இரண்டு பத்திரிக்கைகளில் சங்கத்தை பற்றி தவறாக, பொய்யாக எழுதியது (இந்த பத்திரிக்கைகளில் செய்தி வெளியிட இந்த நபருக்கு உடந்தையாக இருந்தது FORDET ஐ சார்ந்த மூத்தப்பொறியாளர்கள் போர்வையில் இருக்கும் சில கயவர்கள் என்பது ஆதாரபூர்வமாக தெரியவந்துள்ளது. இந்த பத்திரிக்கையே உறுப்பினர்களுக்கு தபால் மூலம் பத்திரிக்கையை அனுப்பியுள்ளதிலிருந்தே இந்த பத்திரிக்கைப் பற்றி தெரிந்துகொள்ளலாம்) அபாண்டமாக பொய் பேசுவதில் இந்த நபரை மிஞ்ச ஆளில்லை. இப்படி பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்படுத்தி வந்த ஜெயபால்மோகன், ராஜகோபால் என்ற உதவிப்பொறியாளரிடம் ரூ.2 இலட்சம் லஞ்சம் கேட்கும் ஆடியோ 25,26-05.2015 ஆகிய இரண்டு நாட்களில் சன்நியூஸ் தொலைக்காட்சியில் திரும்ப திரும்ப ஒளிபரப்பப்பட்டது.

17.05.2015, 19.05.2015 அன்று முறையே தினமலர், தினகரன் பத்திரிக்கைகளில் இந்த செய்தி பெரிதாக வெளியிடப்பட்டுள்ளது. "இரண்டு லட்சம் கொடுத்தால் நான் முடித்துக்கொடுத்து விடுகிறேன். இன்னும் மூன்று மணி நேரம் தான் அவகாசம் உள்ளது. அதற்கு பிறகு உங்களுக்கு பிடித்த கடவுள் தான் உங்களை காப்பாற்ற வேண்டும்" என்று ஜெயபால்மோகன், ராஜகோபால் என்ற உதவிப்பொறியாளரிடம் பேசுவது சன்நியூஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பபட்டது.

இது WhatsApp மூலம் பலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை ராஜகோபால் உதவிப்பொறியாளரே ரெகார்ட் செய்து வெளியிட்டுவிட்டார். இலஞ்ச ஒழிப்பு போலீசிலும் ஜெயபால்மோகன் மீது புகார் செய்து விட்டார். கடந்த மூன்று, நான்கு மாதங்களில் ஜெயபால்மோகன் மீது வேறு வேறு குற்றங்களுக்காக பல்வேறு charges போடப்பட்டுள்ளது.

ஜெயபால்மோகன் 31.05.2015 அன்று ஓய்வு பெற இருந்தார். ஆனால் ஓய்வு பெறுவதற்கு முன்பு சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

அண்ணா, எம்.ஜி.ஆர் சமாதிகளில் செருப்பு விடுவதற்கு டோக்கன் போடக்கூடாது என்று தடை இருந்தக் காலத்திலேயே, அங்கு இளநிலைப்பொறியாளராக இருந்த ஜெயபால்மோகன் செருப்பு டோக்கன் போட்டு வசூல் செய்து முறைகேடு செய்ததால் ஜெயபால்மோகனை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். திரு. ராபர்ட் ஜெயபால்மோகனின் வலதுகரமாக திகழ்ந்தார். ஜெயபால்மோகனின் உறவினர். இவரை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்துவிட்டார்கள். கொலையாளிகள் என்று மூன்று பேர் போலீசில் சரண் அடைந்துவிட்டார்கள்.

ஜெயபால்மோகன் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு பல்வேறு கெடுதல்கள் செய்தார். ஆனால் சங்கத்திற்கு எதிராக ஒரு சிறு துரும்பைக்கூட இந்த நபரால் அசைக்கமுடியவில்லை. சங்கத்திற்கு எதிராக செயல்பட்ட இந்த நபருக்கு சரியான தண்டனை கிடைத்துள்ளது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிராக யார் செயல்பட்டாலும் அவர்களுக்கு இதுதான் கதி என்பதை இயற்கை உணர்த்தியுள்ளது.

நன்றி தினகரன் 19.05.2015

பொதுப்பணித்துறையில்

## சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்ய ₹2 லட்சம் லஞ்சம்

நன்றி தினமலர் 17.05.2015

EXCLUSIVE

## ரூ. 2 லட்சம் லஞ்சம் கேட்கும் ஆடியோ ரிலீஸ்

பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 9.

கடித எண். 10111/டி1/2015-1, நாள் 04.05.2015

அனுப்புநர்
திரு.தா.ஜோசப் பெஸ்கி, எம்..ஏ.,பி.எட்.,
அரசு துணைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர்,
நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித் துறை, சென்னை -5.(இ)

ஐயா,

பொருள்: பொதுப்பணித் துறை - தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் வருடக்கணக்கில் தாமதமாகும் கோப்புகள் - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக.

பார்வை: பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை-5 அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் நாள் 20.04.2015.

பார்வையில் காணும் கடிதத்தின் நகலினை இத்துடன் தங்களுக்கு இணைத்தனுப்புவதோடு அதில் காணும் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

Sd/-

அரசு துணைச் செயலாளருக்காக

நகல்
பொதுச் செயலாளர்,
த.நா.பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை-5.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.**

**வழங்கும்**

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2015

**10 அல்லது 12 தேறியவர்களுக்கு மட்டும்**

**விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)**

1. மாணவர் / மாணவியர் பெயர் ..........................................................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..........................................................................
3. உறுப்பினர் எண் ..........................................................................
4. முகவரி ..........................................................................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை ..........................................................................
6. 10 அல்லது 12-ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) ............................
7. 10 அல்லது 12-ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும் ......................
8. 10 அல்லது 12-ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா? ஆம் / இல்லை ....................

**சங்க உறுப்பினர் கையொப்பம்** **மாணவ / மாணவி கையொப்பம்**

## சான்றிதழ்

பொறியாளர் ................................ கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண் ................ / சாதாரண உறுப்பினர் எண் .................................. தொடர்ந்து 2013, 2014 மற்றும் 2015ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2015-ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே ......................... மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2013............................ | .......................... | .................. |
| 2014............................ | .......................... | .................. |
| 2015............................ | .......................... | .................. |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்........................................................கிளை

## தலைமைச் சங்கம்

மாணவர் / மாணவியின் பெயர் ..........................................................................

சங்க உறுப்பினர் பெயர் ..........................................................................

உறவு முறை ..........................................................................

2015ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று ........................................................பரிசாக ரூ............................பெறுகிறார்.

**பொதுச் செயலாளர்** **தலைவர்**

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2015

(10-ம் வகுப்புக்கும், 12-ம் வகுப்புக்கும் தனித் தனியாக)

**10-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ. 3000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 2000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 1000/- வீதம்

**12-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ.5000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 3000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 2000/- வீதம்

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்தத் தலைவர்கள் பொறியாளர் எஸ்.கணபதி மற்றும் பொறியாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980-ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2015-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

2015-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 2000/- (ரூபாய் ஒரு இரண்டாயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

**தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:**

1. 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம்,

சென்னை - 5 என்ற முகவரியிட்டு ரூ. 50 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூரிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2015-க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2015க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றி விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

## வாழ்த்துக்கள்



| | |
|---|---|
| Language | 97 |
| English | 98 |
| Maths | 100 |
| Science (Theory + Practical) | 100 |
| Social Science | 100 |
| Total | 495 |



தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் S.கந்தசாமி உதவி பொறியாளர் அவர்களின் மகள் S.K. ஜனனி பிரியா எஸ்.எஸ்.எல்.சி ஆங்கிலோ இந்தியன் தேர்வில் 495 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அவருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.

# விவசாயிகளின் துயர் நீக்கிய இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை பொறியாளர் ஆர்தர் காட்டன்

### கொள்ளிடத்தின் குறுக்கே மேலணை கட்டியவர்

முல்லை பெரியாறு அணை என்றால் பென்னிகுக்கும், மேட்டூர் அணை என்றால் ஸ்டான்லியும் நினைவுக்கு வருவது போல, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேலணை என்றவுடன் நினைவுக்கு வருபவர் ஆங்கிலேய பொறியாளர் சர் ஆர்தர் காட்டன்.

இங்கிலாந்தில் 1803, மே 15-ல் பிறந்த ஆர்தர் காட்டன், இந்தியாவில் நீர்ப் பாசன வசதிகள் செய்து தரவும், கால்வாய்கள் அமைக்கவும், அணை கட்டுவதற்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். இதனால், இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

1829-ல் காவிரி பாசனப் பகுதிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஆர்தர் காட்டன், மணல் மேடுகளால் நீரோட்டம் தடைப்பட்டிருந்த கல்லணையில் மணல் போக்கிகளை அமைத்தார். அப்போது, கரிகால் சோழன் கட்டிய கல்லணையின் அடித்தளத்தைக் கண்டு வியந்து, "ஆழம் காண முடியாத ஆற்று மணற்படுகையில் அடித்தளம் அமைக்கும் தொழில்நுட்பத்தை பண்டைய தமிழர்கள் வாயிலாக அறிந்து கொண்டேன்" என்றார். கல்லணைக்கு "கிராண்ட் அணைகட்" என்ற பெயரைச் சூட்டியவரும் இவரே.

காவிரி ஆறு முக்கொம்பில் காவிரி, கொள்ளிடம் என இரண்டாக பிரிகிறது. கொள்ளிடம் ஆற்றுப் பகுதி தாழ்வாக இருப்பதால், அங்கு நீர் அதிகமாக பாய்ந்து காவிரியில் உரிய நீர் வரத்து இல்லாமல் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளின் துயர் துடைப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொறுப்பை ஆர்தர் காட்டனிடம் வழங்கியது ஆங்கிலேய அரசு.

இதையடுத்து, கல்லணையை முன்மாதிரியாகக் கொண்டு 1835-36 இல் கொள்ளிடத்தின் குறுக்கே மேலணையைக் கட்டினார். இதனால் கொள்ளிடம் ஆற்றில் வீணாக நீர் செல்வது தடுக்கப்பட்டது. தவிர கும்பகோணம் அணைக்கரை கீழணை, வெண்ணாறு, வெட்டாறு நீர்ப் பாசனங்களையும் இவர் முறைப்படுத்தினார்.

ஆந்திராவில் கோதாவரியின் குறுக்கே 1942-57-ம் ஆண்டுகளில் இவர் கட்டிய அணையால் தரிசாகக் கிடந்த 10 லட்சம் ஏக்கர் நிலப்பகுதியில் இன்று முப்போகம் விளைகிறது. அதற்கு நன்றிக்கடனாக அங்கு கிராமந்தோறும் ஆர்தர் காட்டன் சிலையை நிறுவியுள்ளனர். மேலும், அவரது வரலாற்றை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் ராஜமுந்திரியில் அருங்காட்சியகம் அமைத்துள்ளனர்.

இத்தகைய சிறப்புடைய ஆர்தர் காட்டனைப் பற்றி தமிழக விவசாயிகளும், அறிந்து கொள்ளும் வகையில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு இயற்கை பாதுகாப்பு சங்கத் தலைவர் வ.சுந்தரராஜ் கூறும்போது, "இந்திய தேசத்தின் வறுமையைப் போக்க ஒரே தீர்வு, நீர் வளத்தை சிறப்பாக பயன்படுத்துவதுதான் என்று கூறியவர் சர் ஆர்தர் காட்டன். தமிழகம் முழுவதும் பல்வேறு நீர்ப் பாசன திட்டங்களை முடித்துக் கொடுத்த ஆர்தர் காட்டனுக்கு முக்கொம்பிலும், கல்லணையிலும் பெயரளவில் மட்டுமே சிலை இருக்கிறது. அவரது வாழ்க்கை வரலாறு குறித்து பெரும்பாலானோருக்கு தெரியவில்லை.

ஆந்திராவில் கோதாவரி மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான சிலைகள் ஆர்தர் காட்டனுக்கு இருக்கிறது. அவரது பிறந்தநாளை அம்மாநில மக்கள் கொண்டாடுகின்றனர். அவரது வரலாற்றை அறிந்து கொள்ளும் வகையில் தமிழகத்திலும் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும். பள்ளி பாடத் திட்டத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றை இணைக்க வேண்டும்" என்றார்.

- நன்றி தி இந்து

**15ம் தேதியை பிறந்த நாளாகக் கொண்ட பெரியோர்கள்**

| | | |
|---|---|---|
| ஜனவரி 15 | - | கர்னல் ஜான் பென்னி குயிக் |
| மே 15 | - | சர் ஆர்தர் தாமஸ் காட்டன் |
| செப்டம்பர் 15 | - | மோட்ச குண்டம், மாமேதை பொறி. விஸ்வேஸ்வரய்யா |
| அக்டோபர் 15 | - | டாக்டர் A.P.J. அப்துல் கலாம். |

## நன்கொடை

கடந்த 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நமது சங்கத்தின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமான"2008-ம் ஆண்டு தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற 29 நபர்கள் அரசாணை எண்.1 சம்பந்தமான வழக்குகளை எதிர்கொள்ள ரூ.15,000/- சிறப்பு வழக்கு நிதியாக தரவேண்டும் " என்பதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பொறியாளர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

1) A.சீனிவாசன் உதவிப்பொறியாளர் சென்னைக்கிளை ரூ.15,000/-

2) D.ரவி உதவிப்பொறியாளர் சென்னைக்கிளை ரூ.15,000/-

3) A.S.M.முத்துசாமி உதவிப்பொறியாளர்சென்னைக்கிளை ரூ.15,000/-

4) M.இளங்கோ உதவிப்பொறியாளர் திருநெல்வேலி தூத்துக்குடிகிளை ரூ.15,000/-

5) R.G.ராஜலஷ்மி உதவிப்பொறியாளர் சென்னைக்கிளைரூ.15,000/-

6) S.மதியழகன் உதவிப்பொறியாளர்சேலம் கிளை ரூ.15,000/-

7) S.துரைசிங்கன் உதவிப்பொறியாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை ரூ15,000/-

8) M.மணிமாறன் உதவிப்பொறியாளர் திருச்சிகிளை ரூ.15,000/-

9) V.தமிழ்செல்வி உதவிப்பொறியாளாசென்னைகிளை ரூ15,000/-

சிறப்பு வழக்கு நிதி வழங்கிய மேற்கண்ட பொறியாளர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரைக்கிளை கூட்ட அரங்கிற்கு பொறியாளர் H. ஜாகிர்உசேன் உதவிச்செயற்பொறியாளர் அவர்கள் 20 பிளாஸ்டிக் நாற்காலிகள் அன்பளிப்பாக அளித்துள்ளார்.

## GOOD BYE

Name : Er. G. Sakthivelsamy, DCE., B.E., M.I.E.,DEPC.,M.Tech.,
Assistant Executive Engineer, PWD.,WRO.,
Project Sub Division -I, Cheranmahadevi,
Tirunelveli District



Date of Birth : 03.05.1957
Date of Joining : 14.03.1986
Superannuation : 31.05.2015
Address : 89, Arasady Vinayagar Koil Street, T.N. Pudugudi,
Puliangudi-627855, Tirunelveli District
Cell No. : 9443620194

Having completed my S.S.L.C. during the year 1973-74, I studied Diploma in Civil Engineering at Ramasamy Raja Polytechnic, Rajapalayam in Virudhunagar District. After completing my Diploma in Civil Engineering, I had been to Maharastra State, there I worked for 8 years in various organizations like Continental Construction Company, Zillaparisad, and Forest Development Corporation of Maharastra State.

In the year 1986, I joined the PWD as Junior Engineer through 1983-1984 TNPSC Exam. Then I worked at various places under many sections till 2000 as JE. From 2000 to 2012, I worked as redesignated AE as I completed my BE degree at Govt.College of Engineering, Palayamkottai. When I was studying M.Tech Environmental Engineering during the year 2012-2014 under PRIST University, Tanjore by weekend course, I got promotion and joined as AEE on 23.11.2012 and worked in the project Sub Division-I at Cheranmahadevi under Nambiyar Reservoir Project Division, Valliyoor till my retirement. In the meantime, I completed my post Graduation (M.Tech) in the month of May 2014. On 31.05.2015, I retired from my service. I wish to say something that is "God makes man but tailor makes gentleman". Similarly Polytechnic produces Diploma Engineers but our TNEA produces Engineering Graduates and Post Graduates. I am telling this because when I joined service I was only a Diploma Engineer, but now I am a Post Graduate Engineer. I am very proud of our TNEA because "No Life Without Wife" and "No Knowledge without college". Similarly "No Engineering Degree without the assistance of TNEA". While concluding this letter I promise that I will be a member of TNEA till death as obliged and truthful.

Good Bye, Good bye, One and all

Yours faithfully,

Sd

(G.SAKTHIVELSAMY)

## பொறியாளர் சங்கத்தின் தவறான பொய் தகவல். வருந்துகிறோம்.

பொறியாளர் சங்கத்தின் கடித எண் 001/GS-AOE/2015-75 dated 16.04.2015 -ல் தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணித் தொகுதியில் உள்ள கீழ்க்கண்ட பாராவை குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். இளநிலைப்பொறியாளர்களுக்குரிய 25% சதவிகிதத்திலும் பட்டயப்பொறியாளர்கள் வருவதை தடுக்கும் வண்ணம் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

No candidate possessing the Diploma in Engineering (Civil or Mechanical) of the college of engineering Guindy shall be eligible for appointment, if suitable candidate possessing the degree in Engineering (Civil or Mechanical) of the Madras or Annamalai University or the BSc., (Engineering) degree of the Banaras Hindu University is available for such appointments.

மேற்கண்ட பாரா எதுமாதிரி சூழ்நிலையில் போடப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். ஆரம்பகாலங்களில் பொறியியல் பட்டதாரிகள் (Graduate Engineers) போதுமான அளவில் இல்லாததால் பட்டப் பொறியாளர்களுக்குரிய 75 சதவிகிதத்திலும் பட்டயப்பொறியளர்களே வந்துக்கொண்டிருந்தார்கள்.அதற்காக 75% சதவிகிதத்திற்கும் பட்டயப்பொறியாளர்கள் வராமல் தடுக்க போட்ட பாரா தான் இது. இதை தவறாக புரிந்துக்கொண்டதால் இந்த பாராவை நீக்குவதற்காக 1956 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு விதிகளில் (Rules) இடம் பெற்றுள்ளது. இதை பொறியாளர் சங்கம் மறைத்துள்ளது.

ஆரம்பக்காலங்களில் பட்டயப்பொறியாளர்களும் பட்டப்பொறியாளர்களும், Supervisors என்ற பொதுப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்கள். அந்த காலக்கட்டத்தில் வகுக்கப்பட்ட விதிகள் தான் இவை.

1956 ஆம் ஆண்டு இந்த பாராவை நீக்குவதற்காக அரசு ஆணை எண் 1359 PWD Dated 14.03.1956 மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டு தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணித்தொகுதி (TNESS) விதிகளில் இவர்கள் குறிப்பிட்டுள்ள பாராவுக்கு மேலே இடம்பெற்றிருக்கிறது. தவறுதலாக நீக்க வேண்டிய பாரா நீக்கப்படாமல் இடம் பெற்றிருக்கிறது.

1956 ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையில்

As every year the several Engineering colleges in the State are producing a large number of Engineering degree holders and as there will not therefore be any scarcity of degree holders, the existing provisions in the special Rules mentioned above will completely shut out LCE diploma holders and persons holding similar qualifications from being appointed as supervisors. The Government therefore consider that 25% of the vacancies arising every year in the category of supervisiors in the Public Works and Highways department should be reserved for persons holding LCE diploma and other allied qualifications.

இதை மறைத்து பொறியாளர் சங்கம் கடிதம் கொடுத்துள்ளது. எதிரிகளை தாக்குவதில் கூட ஒரு நேர்மை இருக்க வேண்டும். நேர்வழியில் தாக்கவேண்டும். வருந்துகிறோம்.

த. முருகேசன், பொதுச்செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:253 பொதுப்பணி(எப்1)துறை நாள் 29.05.2015)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | D. ஜான்பிரிட்டோ | தலைமைப் பொறியாளர் |
| 2. | M. செல்வராஜு | தலைமைப் பொறியாளர் |
| 3. | S. நடராஜன் | சிறப்புத்தலைமைப்பொறியாளர் |
| 4. | L. முனியப்பன் | சிறப்புத்தலைமைப்பொறியாளர் |
| 5. | S.A. சேவியர் | இணைத் தலைமைப்பொறியாளர் (கட்டடங்கள்) |
| 6. | N. மகேஷ்வரன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 7. | R. ஜெயப்பிரகாசம் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 8. | P. செல்வராஜன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 9. | G. கிரிதரன் | துணைக்கண்காணிப்புப்பொறியாளர் |
| 10. | S. கலியமூர்த்தி | செயற்பொறியாளர் |
| 11. | P. சிவகுரு | செயற்பொறியாளர் |
| 12. | M. பன்னீர்செல்வம் | செயற்பொறியாளர் |
| 13. | T. கிளமெண்ட்ராஜா | மின் பொறியாளர் |
| 14. | M.S. மணி | உதவி செயற்பொறியாளர் |
| 15. | G. சக்திவேல்சாமி | உதவி செயற்பொறியாளர் |
| 16. | S. காதர் இப்ராஹிம் | உதவி செயற்பொறியாளர் |
| 17. | A. அங்கமுத்து | உதவி செயற்பொறியாளர் |
| 18. | A. காந்தி | உதவி செயற்பொறியாளர் |
| 19. | N. வேணுகோபாலன் | உதவி செயற்பொறியாளர் |
| 20. | P. ஞானசேகர் | உதவி செயற்பொறியாளர் |
| 21. | E. வேணுகோபால் | உதவி செயற்பொறியாளர் |
| 22. | B. குணதரன் | உதவி செயற்பொறியாளர் |
| 23. | V. சுப்ரமணியன் | உதவி செயற்பொறியாளர்(மின்) |
| 24. | K. லட்சுமிநாராயணன் | இணைத் தலைமைக் கட்டடக் கலைஞர் |
| 25. | S. முத்தையா | துணை இயக்குநர் (நிலவியல்) |
| 26. | A. சின்னப்பன் | தொழில்நுட்ப வல்லுநர் (நிலஇயற்பியல்), |

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. ச. பழனியப்பன்

அரசு முதன்மைச்செயலாளர்

# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்







## மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்














# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













புதிதாக கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் பொறியாளர் ஆர்.பழனிச்சாமி இல்ல முதல் தளம்
திறப்பு விழா நிகழ்ச்சிகள்





# மையச் செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்






Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

June 2015

புதிதாக கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் பொறியாளர் ஆர்.பழனிச்சாமி இல்ல முதல் தளம் கட்டிடத்தை முன்னாள் மாநிலத்தலைவர் பொறியாளர் ஆர். பழனிச்சாமி அவர்கள் திறந்து வைக்கிறார்.



நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 03-06-2015**
**Postng on 05-06-2015**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312